# ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தாவின் சிறு கதைகள்

# Swami Jyothirmayananda’s short stories

**1931 ஆம் ஆண்டு பீகார் மானிலத்தில் ஒரு ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, 1953 ஆம் ஆண்டில் சன்யாச தீட்சை பெற்றவர் ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தா அவர்கள். அமெரிக்காவில் மியாமி என்ற மானிலத்தில் 1969 ஆம் ஆண்டு யோக ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஆசிரமம் ஒன்றை நிறுவி யோக வழி முறைகளைக் கற்றுக் கொடுக்கும் அவர் பல்வேறு புத்தகங்கள் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறு கதைகள் மனதை சிந்திக்க வைப்பவை. அதில் ஒன்றுதான் கீழே உள்ள கதையும். அவர் கொடுத்துள்ள அனுமதியும் கீழே உள்ளது.**

**Swami Jyotirmayananda was born in the year 1931 in Bihar to a noble and orthodox family and took to Sanya Diksha in the year 1953. He founded a Yoga research center and ashram in Miami, USA in the year 1969 and has been teaching the art of Yoga and its practices. Besides he has also authored several books. The short stories written by him are thought provoking. This bilingual story is one in them. The permission given by him is also reproduced below.**

**Swamiji** <swamiji@bellsouth.net> Sun, 16 Jul, 2006 at 3:53 pm
To: nrj_1945@yahoo.com

N. R. Jayaraman

Blessed Self,
Adorations!

Your article was forwarded to me by Dr. Shashi B. Mishra.
I am pleased to see it.

You have my permission to publish translated versions (in Tamil))
of any article from my publications.

Dissemination of spiritual knowledge is the greatest
act of Divine Worship.

May God bless you with Success!

With regards Prem and Om,
Yours in the Lord
Swami Jyotirmayananda

# வால்மீகி

## சாந்திப்பிரியா



இராமாயணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக வால்மீகி என்ற ஒரு முனிவரினால் எழுதப்பட்டது அனைவருக்கும் தெரியும். இராமாயணம் மட்டும் அல்ல யோக வசிஷ்டம் என்ற நூலையும் அவர் எழுதி உள்ளார். வசிஷ்ட மகரிஷிக்கும் பகவான் ராமருக்கும் இடையிலான உரையாடலை அடிப்படையாகக் கொண்ட அந்த நூல் மனதைப் பக்குவப்படுத்தும் வழியினை விளக்கும் உத்தமமான நூலாகும். இந்த புத்தகத்தில் ஆறு பாகங்கள் உள்ளன. முதல் பகுதி உலகில் மனிதர்கள் துன்புறுவதைக் கண்டு மனம் வெறுத்த பகவான் ராமனின் மன நிலை, இரண்டாவது பகவான் ராமரின் பண்பையும் மனதின் தன்மையையும் காட்டுவது, மூன்றாவது ராமபிரான் விரும்பிய ஆத்ம விடுதலையை விளக்கும் பாகம், நான்காவது அந்த ஆத்ம விடுதலை பெற தேவையான ஆன்மீக வாழ்க்கை முறை, ஐந்தாவது தியானம் மற்றும் அதன் சக்திகள் மற்றும் ஆறாவது பாகம் பகவான் ராமரின் ஆனந்த நிலையை

விவரிக்கிறது. இது வால்மீகியால் எழுதப்பட்டதாகக் கூறப்பட்டாலும், முதலில் அதை மகரிஷி வசிஷ்டவே எழுதியுள்ளார் என்றும் ஆன்மீக உலகிற்கு ஏற்றவாறு அதை வால்மீகி முனிவர் வடிவமைத்து உள்ளார் என்ற கருத்தும் உள்ளது.

அந்த வால்மீகி யார்? உண்மையில் ரத்தினகாரா என்ற திருடனாக இருந்து பின்னர் மனம் மாறி துறவியானவர். வழியில் செல்பவர்களுடைய நகை மற்றும் பணத்தை கொள்ளயடித்து வந்தவர். ஒரு முறை நாரதரும் அவருடன் மற்றவர்களும் செல்வதைக் கண்டவர் அவர்களை கொள்ளையடித்து கொலையும் செய்ய முடிவு செய்தார். நாரதர் எதிரில் சென்றவனைப் பார்த்து நாரதர் கேட்டார்' நீ என் எல்லோரிடம் இருந்தும் கொள்ளையடித்து பாவத்தை சுமக்கின்றாய்? எவருக்காக பொருள் சேர்க்கின்றாய்?' அதற்கு ரத்னகாரா கூறினான் 'நான் என்னுடைய குடும்பத்தினர் நலமாக வாழவே கொள்ளையடித்து அவர்களைக் காப்பாற்றுகிறேன். நான் செய்யும் பாப காரியங்களில் அவர்களும் பங்கேற்பதால் கொள்ளையடிப்பதை நான் பாபமாகக் கருதவில்லை' என்று கூற நாரதர் கேட்டார்' நிச்சயமாக உன் குடும்பத்தினர் உனக்கு வர இருக்கும் பாபங்களையும் தோஷங்களையும், தீய கர்ம வினைகளையும் தாமும் ஏற்கின்றார்கள் என நம்புகின்றாயா?' எனக் கேட்க ரத்தினகாராவினால் உடனடியாக பதில் ஏதும் கூற இயலவில்லை. மனம் குழம்பியது. நாரதர் என்ன கூறுகின்றார் என யோசித்தான். என் பாபங்களையும் தோஷங்களையும், தீய கர்ம வினைகளையும் அவர்கள் சுமக்க மாட்டார்களா என்று மீண்டும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டவன் துக்கம் பீறிட அவர் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். அவனைத் தேற்றிய நாரதர் அதற்கு பிராயசித்தமாக 'ராமா, ராமா' என்ற ஜபத்தை செய்யுமாறு கூற அவனால் அதை சரிவர ஜபிக்க முடியவில்லை. ஆகவே அவர் 'சரி அப்படி என்றால் மாரா, மாரா என ஜெபித்தபடி இரு' என்றார். மாரா என்றால் இறந்தவன் என்று பொருள். 'மாரா, மாரா' என ஜெபிக்கத் துவங்கியவன் அது ராமா, ராமா என்ற வார்த்தைகளை உச்சரிப்பது போல உள்ளதைக் கண்டு மனம் மகழ்ந்தான். அப்படியே அங்கு அமர்ந்து கொண்டு இராம ஜெபம் செய்யத்

துவங்கினான். அப்படியே தன்னை மறந்து ஜெபம் செய்து கொண்டு இருந்தவனை சுற்றிக் கரையான் புற்று எழும்பி விட்டது. தியானம் கலையவில்லை. அவருடைய ஆற்றலைக் கண்ட இந்திரனும் வருண பகவானை அனுப்பி மழை பொழியச் செய்து அவரை சுற்றி இருந்த புற்றைக் கரைய விட்டார். புற்றில் இருந்து வெளி வந்தார் இரத்னகாரா. வாலமீகி என்றால் எறும்புப் புற்று என்று பொருள். ஆகவே எறும்பு புற்றில் இருந்து புதிய மனிதராக வெளி வந்த அவருக்கு வால்மீகி என்ற பெயர் ஏற்பட்டது.

அந்த இடத்திலேயே ஆசிரமம் ஒன்றை அமைத்தார். அவருக்குப் பல சீடர்கள் கிடைத்தனர். அப்படி இருக்கையில் ஒரு நாள் காட்டில் சென்று கொண்டு இருந்த அவர் வானத்தில் இரண்டு பறவைகள் மிகவும் சந்தோஷத்துடன் பறந்து கொண்டு இருப்பதைக் கண்டார். ஆனால் துரதிஷ்டவசமாக எங்கிருந்தோ பறந்து வந்த அம்பினால் ஒரு பறவை அடிபட்டுக் கீழே விழ அதைத் தொடர்ந்து பறந்து வந்த பறவை துக்கம் மேலிட அழுது புலம்பியதைக் கண்டார். அவரும் அதைக் கண்டு துயரம் அடைந்து மனிதர்கள் துயரம் அடைந்தால் எத்தனை வேதனைக்கு ஆளாகின்றனர் என்பதை உணர்த்தும் வகையில் 'கொடியவனே, இன்பமாக இருந்த இளம் பறவையை ஏன் கொன்று விட்டாய். உனக்கு முடிவில்லா சாபம் கிடைக்கட்டும்' என சமஸ்கிருதத்தில் பாடலைப் பாடினார். அடுத்த நிமிடம் தனக்கு அப்படி கவிதை இயற்றும் ஆற்றல் எங்கிருந்து வந்தது என வியந்தபோதே அவர் முன்னால் பிரும்மா தோன்றினர். அவர் வால்மீகியிடம் இராம காவியத்தை எழுதும்படிக் கூறி விட்டு மறைந்தார். என்ன ஆச்சர்யம்? இராமர் அப்போது பிறக்கவே இல்லை என்றாலும் முற்காலம், பிற்காலம், நடப்புக் காலம் என முக்காலத்தையும் உணரும் சக்தி பெற்று இருந்தவ வால்மீகி இராமாயணத்தை இயற்றினார்.

அது போல இராமாயணத்தை எழுதிய மற்றொருவர் துளசிதாஸ் என்பவர். கி பி 1496 ஆம் ஆண்டில் பிறந்ததாகக் கூறப்படும் அவர் பிரயாகை என்ற இடத்தில் இருந்த பொழுது அனாதையானார் அப்போது அவருடைய வயது ஐந்து. அவருக்கு வைஷ்ணவ பக்தர் என்பவர் அடைக்கலம் தந்து படிக்க வைத்தார்.

முதல் சந்திப்பிலேயே பெயர் தெரியாத துளசிதாஸர் அவரிடம் இராமரைப் பற்றியே பேசி வந்தாராம். திருமண வயதை எட்டிய துளசிதாஸர் ஒரு பெண் மீது காதல் கொண்டு திருமணம் செய்து கொண்டார். அவளுடைய பெற்றோர் ஊரில் இல்லாத பொழுது அவளைக் காண நதியைக் கடந்து படகு மூலம் சென்றார். ஆனால் அவர் அமர்ந்து சென்றது ஒரு பிணத்தின் மீதுதான் என பிறகுதான் அவருக்கே தெரிந்தது. மனைவி வீட்டை அடைந்தபோது வீட்டின் வாயில் கதவுகள் பூட்டப்பட்டு இருந்ததினால் அவள் அறையில் இருந்து தொங்கிக் கொண்டு இருந்த கயிறு மூலம் மேலே ஏறிச் சென்றார். பிறகுதான் அங்கும் தெரிந்தது, அவர் முதலில் பிடித்துக் கொண்டு மேலே ஏறியது கயிறு அல்ல, பாம்பு என! பாவம் அத்தனை கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டு வந்தவரை கேலி பேசினாள் மனைவி. தேவையற்ற பொழுதை கடவுள் நினைப்பில் செலவழித்துக் கொண்டு இருந்தால் எத்தனை நன்மை ஏற்பட்டு இருக்கும் எனக் கூற மனம் தெளிவுற்றது. மறுநாள் மனைவி மற்றும் சுற்றத்தாரை விட்டு வெளியேறி புனித யாத்திரையை மேற்கொண்டு விட்டார். ஊர் ஊராக சென்று கொண்டு இருக்கையில் ஒரு இடத்தில் அமர்ந்து தியானம் செய்து கொண்டு இருந்த மரத்திற்கு தண்ணீர் விடுவதை வாடிக்கையாகக் கொண்டு இருந்தார். அந்த மரத்தில் ஒரு பேய் குடி இருந்தது. அவர் தினம் தன்னை வணங்கி பூஜிப்பதாக கருதிக் கொண்டு ஒரு நாள் அவர் முன் தோன்றி அவருக்கு என்ன வேண்டும் எனக் கேட்க அவரும் தான் இராமரை சந்திக்க விரும்புவதாகக் கூறினார். அந்தப் பேயோ தானே சுற்றித் திரியும் ஒரு தீய ஆத்மா எனவும், தானே அதுவரை இராமரை கண்டதில்லை எனவும், அதற்குப் பதிலாக தன்னால் வேறு எதையும் தர இயலும் என்று கூறி விட அதை ஏற்க மறுத்தார் துளசிதாஸர். தனக்கு இராமரைக் காண ஏதாவது வேறு உபாயம் கூறுமாறு கேட்க அந்த ஆத்மா பக்கத்து ஊரில் தினமும் நடக்கும் இராமாயண காலட்ஷேபத்தைக் கேட்க பகவான் ஆஞ்சனேயர் ஒரு பிச்சைக்காரர் உருவில் வந்து அமருவதாகவும், அவரை கண்டு பிடித்துக் கொண்டு தேவையான காரியத்தை நடத்திக் கொள்ளுமாறும் கூறிவிட்டுச் சென்று விட்டது. துளசிதாஸரும் அந்த பேய் கூறிய இடத்திற்குச் சென்று வெண் குஷ்ட பிச்சைக்கார உருவில் அமர்ந்திருந்த பகவான் ஆஞ்சனேயரிடம் இராமனைக் காட்டுமாறு தினமும்

தொந்தரவு செய்ய அவருடைய வைராக்கியத்தைக் கண்ட பகவான் ஆஞ்சனேயரும், பக்கத்து ஊரில் இருந்த புண்ணிய ஷேத்திரத்திற்குச் சென்றால் பகவான் இராமரைக் காணலாம் எனக் கூறி அவரை அனுப்பினார். அவர் கூறிய ஷேத்திரத்திற்குச் சென்ற துளசிதாஸரும் அந்த ஊரின் அழகை இரசித்தபடி இருந்தாரே தவிற தன் எதிரிலேயே இரண்டு குதிரைகளில் அரசகுமாரர்கள் உருவில் சென்ற பகவான் இராமரை கவனிக்கத் தவறி விட்டார். அவர் செய்த தவறை சுட்டிக் காட்டிய பகவான் ஆஞ்சனேயரிடம் தான் மிகவும் வருத்தம் அடைவதாகக் கூறி அழுதார். பகவான் ஆஞ்சனேயர் இன்னொரு உபாயம் கூற அதை ஏற்று வாரணாசிக்குச் சென்றார். அவர் எதிரில் பகவான் இராமர் வந்தால் அவருடைய நெற்றிப் பொட்டில் சந்தனம் இட்டு வணங்க வேண்டும் எனக் கூறி இருந்தார். வாரணாசிக்குச் சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்ட துளசிதாஸர் இராமர் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தார். அப்போது ஒரு நாள் ஒரு சிறுவன் அவர் முன் வந்து 'ஐயா உங்கள் நெற்றியில் நான் பொட்டு வைக்கின்றேன்' எனக் கூறி பொட்டு வைக்க அசரி உருவில் வந்த பகவான் ஆஞ்சனேயர் அந்த சிறுவனே பகவான் இராமன் என அவருக்குக் கூற அவர் சுதாரித்துக் கொள்ளும் முன்பே பகவான் இராமர் மறைந்து விட்டார். மிண்டும் துளசிதாஸர் வருத்தமுற்றார். ஆனால் அந்த வருத்தமே அவர் உள்ளத்தில் பேரானந்தத்தை ஏற்படுத்தியது. திடீர் என ஏற்பட்ட உற்சாகத்தினால் 1595 ஆம் ஆண்டு வெறித்தனமாக இராம காவியத்தை இந்தி சமஸ்கிருத மொழியில் எழுதத் துவங்கினார். வால்மீகியோ இராம காவியத்தை சமஸ்கிருத மொழியில் எழுதியிருந்தாலும் இரண்டுமே தனித்தன்மைக் கொண்டு இருந்தன. தன்னுடைய படைப்புக்கள் அனைவருக்கும் புரிந்து கொள்ளும் மொழியில் இல்லையே என மனம் வருந்திய வால்மீகியே தான் துளசிதாஸராக அவதரித்து இந்தி மொழியில் அந்த காவியத்தை இயற்றியதாகவும் நம்பிக்கை உள்ளன. எது எப்படியோ இராம காவியத்தின் மூலம் மாபெரும் வீரன், நல்ல கணவன், நல்ல சகோதரன், நல்ல அரசாட்சி, பாசமிக்க பெற்றோர் போன்றவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை உலகிற்குக் காட்டி மக்களுக்கு நன்நெறியுடன் வாழவேண்டிய அவசியத்தை அவர்கள் காட்டி உள்ளனர் என்பதே இராமாயணக் காவியத்தின் மகிமை.

# Valmiki

## Santhipriya



Ramayana was written several thousands of years ago by Sage Valmiki. Besides Ramayana, he has also scripted 'Yoga Vashishta', a text which is based on the conversation between Vashishta Maharishi and Prince Rama. The book has six parts. The first part presents frustration of Lord Rama for the world seeing human suffering, the second describes feelings of Lord Rama, the third his desire for liberation, the fourth the liberation through a spiritual life, the fifth on meditation while the sixth describe the state of an enlightened and blissful Rama. Though it is claimed to be written by Valmiki, few say that it was written by Maharishi Vashishta himself which has been fine-tuned by Sage Valmiki to suit the spiritual world.

Sage Valmiki was initially a hunter named Rathnakara, who looted people going through the forest where he lived in a jungle with his wife and children. No traveller who passed through the jungle was safe. The hunter didn't hesitate to kill them while robbing. One day when Sage Narada was passing through the forest, Rathnakara attempted to rob his belongings and kill them. Maharishi Narad asked the robber whether he was aware that looting others carry sin on his head. Rathnakara replied that he was engaged in the act of robbery only to feed his family and since they too supported him, he did not consider it to be a sin. Maharishi Narad asked him to confirm whether his family would share the deeds of sin accrued by him. Sage Narada's query shocked Rathnakara who thought for a while and fell at his feet and sought pardon and to guide him in his life to lead a peaceful life. Maharishi Narada suggested him to chant the name Rama…Rama repeatedly and whispered it in his ears as if he was giving diksha. Since he could not chant it properly, Narada Muni suggested that he chant Mara…Mara instead of Rama…Rama, mara meaning dead. As Rathnakara began to chant the name Mara, Mara over and over again, he realised that he was actually chanting Rama…Rama as repeating the syllables in quick succession pronounced the name as Rama, Rama.

Captivated by the charm of the sacred name Rathnakara sat on meditation for years with the result the ants began to build anthill around him which grew and grew until they covered him completely. Pleased with his long penance Lord Indira and Lord Varuna (God of rain) sent heavy showers of rain to dissolve the anthill from which the sage came out. Valmika in Sanskrit meant anthill and therefore

Rathnakara derived the name Valmiki. After that, Valmiki set up an ashram and lived there with several disciples.

One day he saw a pair of Krouncha birds in love with each other, flying joyously in the sky when suddenly one of the birds struck with an arrow fired by a hunter fell down bleeding. Seeing her mate gone, the female bird flew round and round his body, moaning and wailing. The bird's grief was so pitiable, that it touched the heart of sage Valmiki who unable to gulp the misery of the small bird sang a poem in Sanskrit briefly meaning 'oh sinner, for having killed one of the true loving birds you have accrued sin and may your future remain ever in dark'. When came to his senses he was surprised to realise how he uttered such words in rhythm and melody where as he was uneducated. Next moment Lord Brahma appeared before him and directed him to script Ramayana and disappeared. The surprising part of this is that when Lord Brahma appeared and directed so, Lord Rama had not even born.

Another sage who wrote Ramayana was Maharishi Thulasidas who turned an orphan at the age of five and took asylum under one Vaishnava ascetic and always discussed about Lord Rama. As he grew Thulasidas got married with a girl whom he loved. Once he had to cross a river sitting on a wooden log to meet his wife when her parents were away. After reaching the other end he realised that it was a dead body on which he travelled. On reaching her home, he found the doors locked and therefore climbed into the house with the help of a rope which was hanging there. Again he realised later that it was not a rope but a long serpent with which he climbed. Instead of appreciating the extent of struggle which he had

encountered to meet her, she chided that had he devoted half his time in divine worship, he would have gained a lot. Ashamed by her taunt, Thulasidas and left on pilgrimage abandoning his family.

Thulasidas had the habit of watering a tree daily and pleased with his act, a ghost which was residing on it came down and asked him to seek any help he may need. When Thulasidas expressed his desire to see Lord Rama, the Ghost regretted saying it was beyond its capacity to help as it was a ghost, however it suggested that he meet Lord Hanuman who came everyday disguise of a leper to listen to the story of Lord Ram in a nearby temple. Thulasidas attended the Satsang (discourse), and met Lord Hanuman who was sitting there in the form of a leper and pleaded with him to help him meet Lord Rama face to face. Lord Hanuman told him to go to Chitrakuta where he could see Lord Rama with his own eyes and once he met him, he has to apply a scared mark on his forehead with sandalwood paste. Heeding to the instruction of Lord Hanuman when Thulasidas went there and waited for the arrival of Lord Rama, one day, some stranger passed by him in two horses which was Lord Rama only and later Thulasidas realised that he missed to meet him. On another day a child came and asked for a sandalwood mark be made on his forehead (a religious mark on the forehead). This time Lord Hanuman gave a hint to Thulasidas that the child was indeed Lord Rama. Thulasidas was so charmed that he put a mark on his own forehead and began to write the story of Lord Rama. Though both versions of Ramayana written by Valmiki and Thulasidas were quite different, it is believed that only sage Valmiki took birth as Thulasidas to write Ramayana in Hindi which portray the aspects to be held by a true husband, wife, parents, brothers, warrior and a King.